முதல்வர் அலுவலகம் அரசினர் பொறியியற் கல்லூரி, கோவை-641013.

மேற்குறிப்பாணை எண்:1302-2/ஈ3/2025, நாள்:14.02.2025

பொருள்: அரசினர் பொறியியற் கல்லூரி, கோவை-13-2024-2025-ஆம் கல்வி ஆண்டிற்கான மாநில அரசு வழங்கும் பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல கல்வி உதவித்தொகை **புதுப்பித்தல் (Renewal)** விண்ணப்பம் அனுப்புதல்-தொடர்பாக.

********

இக்கல்லூரியில் 2024-2025-ஆம் கல்வியாண்டில் பி.இ இரண்டாம் ஆண்டு, மூன்றாம் ஆண்டு, நான்காம் ஆண்டு மற்றும் எம்.இ இரண்டாம் ஆண்டு பயிலும் மாணவர்களுக்கு, மாநில அரசு வழங்கும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் (BC/MBC/DNC) நல கல்வி உதவித்தொகை புதுப்பித்தலுக்கான (Renewal) விண்ணப்பம் மற்றும் அவ்விண்ணப்பத்தை பூர்த்தி செய்ய ஏதுவாக மாதிரி விண்ணப்ப படிவம் (Model Form) , இக்கல்லூரியின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. எனவே மாணவர்கள் புதுப்பித்தலுக்கான விண்ணப்பம் மற்றும் DATASHEET-ஐ கல்லூரியின் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து, இணைக்கப்பட வேண்டிய உரிய சான்றிதழ்களை இணைத்து COVERING LETTER-ஐ முதல்வருக்கு எழுதி, விண்ணப்பத்துடன் இணைத்து தத்தம் துறையில் (DEPARTMENT) உள்ள கல்வி ஆலோசகரிடம் (FacultyAdvisor) நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ சமர்ப்பிக்குமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. Covering Letter-ஐ இணைத்தனுப்பாத மாணவர்களின் கல்வி உதவித்தொகை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மேலும் **விண்ணப்பத்தின் முதல் பக்கத்தில் மாணவர்களின் விவரம், Scholarship Id மற்றும் Hostler or Day Scholar போன்ற விவரங்களை எழுதி சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.**

**மாணவர்கள் இக்கல்வியாண்டில் செலுத்திய கல்லூரி கட்டண ரசீது (College Fee Receipt), விடுதிக்கான கட்டண ரசீது (Hostel Fee Receipt) மற்றும் விடுதிச் சான்று (Hostel Certifuicate) ஆகியவற்றை தவறாமல் விண்ணப்பத்துடன் இணைத்தனுப்ப வேண்டும்.** மேற்குறிப்பிடப்பட்டுள்ள கட்டண ரசீதுகள் மற்றும் விடுதிச் சான்றுகளை விண்ணப்பத்துடன் இணைத்தனுப்பாத மாணவர்களுக்கு இக்கல்வியாண்டிற்கான கல்வி உதவித்தொகை பெற்று வழங்கப்படமாட்டாது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

புதுப்பித்தல் விண்ணப்பத்தில் கேட்கப்பட்டுள்ள அனைத்து விவரங்களையும் தவறாமல் பூர்த்தி செய்து சமர்ப்பிக்குமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. மேலும் **நடப்பு ஆண்டில் மாணவர்கள் விடுதியில் சேர்ந்த நாள் (Current Academic Year Hostel Joining Date) மற்றும் நடப்பு ஆண்டில் கல்வி நிலையத்தில் சேர்ந்த நாள் மற்றும் சென்ற ஆண்டில் படித்தபோது வருகைப் பதிவின் விழுக்காட்டினை (Attendance Percentage) எழுதி தத்தம் துறையில் உள்ள கல்வி ஆலோசகரிடம் (Faculty Advisor) கையொப்பம் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.**

மாணவர்கள் மாதிரி விண்ணப்பத்தை பார்த்து தங்களுடைய விண்ணப்பங்களை பூர்த்தி செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறது. விண்ணப்பத்தை சரியாக பூர்த்தி செய்யாத மற்றும் உரிய சான்றிதழ்களை இணைக்காத மாணவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

<u>கல்வி ஆலோசகர்கள் (Faculty Advisor) விண்ணப்பங்களை மாணவர்களிடமிருந்து பெற்று முதல்வர் அலுவலகத்தில் கல்வி உதவித்தொகை பிரிவில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.</u>

மாணவர்கள் விண்ணப்பங்களை பூர்த்தி செய்து 28-02-2025-ஆம் தேதிக்குள் சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது. குறிப்பிட்ட தேதிக்கு மேல் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/கி.மனோன்மணி
முதல்வர்

இணைப்பு: புதுப்பித்தல் விண்ணப்பம், Data Sheet, மாதிரி விண்ணப்பம் மற்றும்
விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்களின் விவரம்

பெறுநர்
அனைத்து துறைத்தலைவர்கள் UG மற்றும் PG

நகல்
1. அறிவிப்புப் பலகை-அனைத்து விடுதி, அலுவலகம் மற்றும் அனைத்து துறைஅறிவிப்பு பலகைகள்
2. முதல்வரின் நேர்முக உதவியாளர்
3. "ஈ" பிரிவு கண்காணிப்பாளர் இருப்பு கோப்பு
4. ஈ3 தொகுப் கோப்பு

//ஆணையின்படி அனுப்பப்படுகிறது//

கண்காணிப்பாளர்